***DEPOSITION OF WITNESS***

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

- - - - -

## *IN THE COURT OF SESSIONS,*
## *MAHALIR NEETHIMANDRAM, MADURAI.*

| | | |
|---|---|---|
| ***Case No.*** | : | ***SC No. 03 / 2024*** |
| ***Deposition of witness for*** | : | ***PW : 1*** |
| ***Name*** | : | திருமதி. சூர்யா |
| ***Father's Husband's Name*** | : | |
| ***Village*** | : | |
| ***Taluk*** | : | |
| ***Caste*** | : | |
| ***Calling*** | : | |
| ***Religion*** | : | |
| ***Age*** | : | |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of* ***28.04.2025***

எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.

**முதல் விசாரணை :**

நான் மதுரை பைக்காராவில் குடியிருந்து வருகிறேன். எனக்கு சுஜன் என்ற ஆண் மகனும், சுகாசினி என்ற பெண் குழந்தையும் உள்ளார்கள். இவ்வழக்கின் எதிரி எனது கணவர் ஆவார். எனது கணவர் லோடு மேன் வேலை பார்த்து வந்தார். எனக்கும் எதிரிக்கும் சுமார் 15 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. எங்களுக்கு love marriage தான். திருமணத்திற்குப் பிறகு எதிரி வேலைக்குப் போகவில்லை. குடித்துவிட்டு வந்து தினமும் சண்டை போடுவார். மாதத்தில் 15 நாட்கள் என் கணவர் வீட்டிலும், 15 நாட்கள் என் அம்மா வீட்டிலும் இருப்பேன். கடந்த 2021 ம் ஆண்டு 8 வது மாசம் 14 ம் தேதி, மதியம் 03.00 மணியளவில் நான் என் அம்மா வீட்டில் இருந்த போது, எதிரி குடித்து விட்டு வந்து வீட்டிற்கு வா என்று கூப்பிட்டார். அவர் குடித்திருந்ததால், நான் அவரிடம் நீ போ, நான்

அப்புறம் வருகிறேன் என்று சொன்னேன். அதன் பிறகு மீண்டும் மாலை 06.00, 06.30 மணிக்கு எதிரி நிறை போதையில் வந்தார். நான் அவரிடம் என்ன இப்படி குடிச்சுட்டு வந்திருக்க என்று கேட்டபோது, அதெல்லாம் ஒன்னும் இல்ல, கூட வேலை பார்ப்பவங்க வீட்ல விசேஷம் என்று சொன்னார். நீ இப்படி குடிச்சுட்டு வந்திருப்பதால், இப்ப வந்தால் சண்டை வரும் நீ போ நான் வரமாட்டேன் என்று சொன்னேன். என்னை தேவடியா, அவுசாரி என்று சொல்லி சண்டை வந்துவிட்டது. அப்போது என் அம்மா, அப்பா, என் தங்கைகள் சத்யா, நித்யா இரண்டு பேரும் இருந்தார்கள். என் தங்கை சத்யா எதிரியிடம், மாமா நீ ஒழுங்கா போ, அவதான் வாரேன்னு சொல்றால, வாய்க்கு வாய் பேசுறா என்று சொன்னாள். அதற்கு எதிரி, என் தங்கை சத்யாவையும் வஞ்சு, கையால் அடித்தார். என்னை அடிக்க வந்து, கீழே தள்ளிவிட்டார். நான் கீழே விழுந்தவுடன் பக்கத்தில் இருந்த கட்டையை எடுத்து என்னை அடிக்க வந்தார். எனது பக்கத்து வீட்டைச் சேர்ந்த பெரியம்மா மரியரூபி என்பவர் எதிரியை ஏன்டா இப்படி செய்ற என்று விலக்க வந்போது அந்த கட்டையால் மரியரூபியை தலையில் அடித்து இரத்தம் வந்துவிட்டது. அந்த அம்மாவை உடனடியாக ஆஸ்பத்திரிக்கு கூட்டிப் போனார்கள். திருப்பி, ¼ மணி நேரம் கழித்து, விருவிரு என்று எதிரி போய் விட்டு திரும்ப மீன் வெட்டும் கத்தியோடு எதிரி வந்தார். என் வீட்டின் வாசலில் என் அம்மா நின்று கொண்டிருந்தார். நான் இரண்டு step தள்ளி முக்கு மாதிரி இருக்கும் அங்கு நின்று கொண்டிருந்தேன். எதிரி என் அம்மாவை கழுத்தை நோக்கி மீன் வெட்டும் கத்தியால் வெட்ட வந்தபோது, என் அம்மா வலது கையால் தடுத்தார். அதில் எனது அம்மாவின் முழங்கை அருகே வெட்டு பட்டது. என் அப்பா ஓடி வந்தார். என் அப்பா அந்த கத்தியை புடுங்க முயற்சித்த போது, என் அப்பாவையும் வெட்டினார். என் அப்பாவிற்கு உள்ளங்கையில் வெட்டுபட்டு இரத்தம் வந்தது. என் அப்பாவிற்கு காயம் ஏற்பட்டது வலது கையா, இடது கையா என்று தற்போது ஞாபகம் இல்லை. நான் அலறல் சத்தம் கேட்டு ஓடி வந்தேன். அப்போது எதிரி என்னைப் பார்த்து, உன்னைய முதல்ல கொல்லனும் என்று சொல்லி, அதே மீன் வெட்டும் கத்தியால் என்னை ஓங்கி வெட்டினார். அந்த வெட்டு எனது இடது கண் புருவத்திற்கு அருகே வெட்டினார். எனது இடது கண் புருவத்தில் மேல் இருந்து

கன்னம் வரை காயத் தழும்பு உள்ளது. எதிரி என்னை மீண்டும் வெட்டியபோது நான் தடுத்ததில் எனது இடது கையில் காயம் ஏற்பட்டது. இடது முழங்கைக்கும் மணிக் கட்டிற்கும் இடையே அந்த காயத்தழும்பு இன்னும் உள்ளது. பின்னர் எதிரி மீண்டும் இடுப்பிற்கு கீழே வெட்டினார். எதிரி என்னை மீண்டும் வெட்ட வந்த போது நான் சட்டியை எடுத்து வீசியதில் அந்த கத்தி கீழே விழுந்துவிட்டது. பின்னர் நான் சுப்பிரமணியபுரம் காவல் நிலையத்திற்குச் சென்று சொன்னேன். எனக்கு அதிக இரத்தப் போக்கு ஏற்பட்டதால் என்னை முதலில் ஆஸ்பத்திரிக்குப் போக சொன்னார்கள். நான் மருத்துவமனையில் இருந்த போது, போலிசார் வந்து என்னிடம் விசாரணை செய்து, நான் சொன்ன விபரங்களை எழுதிக் கொண்டு கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **நான் அளித்த புகார் அதசாஆ.1 ஆகும்.** எதிரி பயன்படுத்திய கத்தியைக் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை

***DEPOSITION OF WITNESS***

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

\- - - - -

## *IN THE COURT OF SESSIONS, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.*

| | | |
|---|---|---|
| *Case No.* | : | *SC No. 03 / 2024* |
| *Deposition of witness for* | : | *PW : 2* |
| *Name* | : | திருமதி. கண்ணாத்தாள் |
| *Father's Husband's Name* | : | |
| *Village* | : | |
| *Taluk* | : | |
| *Caste* | : | |
| *Calling* | : | |
| *Religion* | : | |
| *Age* | : | |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of* ***28.04.2025***

எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.

**முதல் விசாரணை :**

நான் மதுரை பாலநாகம்மாள் 1 வது மேட்டுத்தெருவில் குடியிருந்து வருகிறேன். எனக்கு 3 பெண் பிள்ளைகள். எனது கணவர் பெயர் தயாநிதி. அசா1 சூர்யா எனது மகள். ஆஜர் எதிரி எனது மகள் சூர்யாவின் கணவர் ஆவார். சம்பவத்திற்கு சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்பு, என் மகள் சூர்யாவை எதிரிக்கு திருமணம் செய்து கொடுத்தேன். அவர்களுக்கு ஒரு ஆண், ஒரு பெண் குழந்தை உள்ளார்கள். எதிரி லோடு மேன் வேலை பார்த்து வந்தார். திருமணம் முடிந்து என் மகளும் எதிரியும் சந்தோஷமாக இருந்தார்கள். அதன் பின் சண்டை வந்துகொண்டிருந்தது. என் மகளுக்கு திருமணம் ஆகி சுமார் 10

வருடங்களுக்கு பிறகு ஒரு நாள், என் மகள் சூர்யா எங்கள் வீட்டில் இருந்த போது, எதிரி வந்து என் மகளிடம் சண்டை போட்டார். நாங்கள் விலக்கிவிட்டோம். எதிரி என் மகளை அடிக்க வந்தபோது, என் பக்கத்து வீட்டில் உள்ள ரூபி அம்மா விலக்க வந்ததார். அப்போது எதிரி கட்டையால் ரூபி அம்மாளை அடித்துவிட்டார். மீண்டும் இரவு சுமார் 08.00 மணிக்கு எதிரி மீன் வெட்டும் கத்தியால் எனது சோத்தாங்கையில், எல்லாத்துக்கும் நீதான் காரணம் என்று சொல்லி வெட்டினார். வலது முழங்கையில் காயத்தழும்பு உள்ளது. சத்தம் கேட்டு விலக்க வந்த என் கணவரையும் எதிரி மீன் வெட்டும் கத்தியால் வெட்டியதில் எனது கணவரின் வலது உள்ளங்கையில் காயம் ஏற்பட்டது. என் மகள் சூர்யாவையும் அதே மீன் வெட்டும் கத்தியால் வெட்டியால் என் மகளின் முகத்திலும், இடது கையிலும் தொடையிலும் காயம் ஏற்பட்டது. என் மகள் சத்யா, நித்யா இருவரும் சம்பவத்தின் போது உடன் இருந்தார்கள். எங்களைப் பார்த்து உங்களைக் கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லிவிட்டு எதிரி சென்றுவிட்டார். பின்னர் நாங்கள் காவல் நிலையத்திற்குச் சென்றபோது, இரத்தம் அதிகமாக வருகிறது என்றும் மருத்துவமனைக்குச் செல்லுங்கள் என்று சொன்னார்கள். நாங்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது, போலிசார் எங்களை விசாரணை செய்து எழுதிக் கொண்டார்கள். இந்த சம்பவத்திற்கு பிறகு எதிரியும் என் மகளும் பிரிந்து வாழ்கிறார்கள். நான் தான் மாடு வைத்து என் பேரப் பிள்ளைகளை வளர்த்து வருகிறேன். எதிரி பிள்ளைகளுக்கு எதுவும் செய்தது இல்லை. எதிரியின் அம்மா, என் பேத்தி பெரியபிள்ளை ஆன போது ரூ.2000/- ம், பிறந்த

நாளின் போது ரூ.2000/-ம் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள். எதிரி பயன்படுத்திய கத்தியைக் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை